# அணையட்டும் இந்த அக்னி


## வைணவச் சுடராழி டி.ஏ. ஜோஸப், பாண்டிச்சேரி

18, Fourth Cross (Upstairs), Rainbow Nagar, Pondicherry 605 011

Website: http://dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com




வாசகர்களுக்கு என் பணிவான வணக்கம்! மறுப்பு எழுதும் போது, நபரை ஸ்ரீ உபய வேதாந்த ஸ்வாமி என்று குறிப்பிடலாமே, என்பது சிலர் கருத்து இந்தக் கேள்விக்கு சாட்சாத் ஸ்ரீராமசந்திர மூர்த்தியே பதில் சொல்லி இருக்கிறார். புரட்டுங்கள் வால்மீகி ராமாயணத்தை! அயோத்யா காண்டம் 109ம் சர்க்கத்தில் ஒரு ஸ்வாரஸ்யமான கட்டம். பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தைப் பிடிவாதமாகக் கடைப்பிடிக்கும் ஸ்ரீராமனின் மனத்தைக் கலைத்து காடு போகாமல் தடுத்து நாட்டுக்குத் திருப்ப வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு ஜாபாலி என்ற மகரிஷி "தர்மம், சாஸ்த்ரம், இவையெல்லாம் பொய்! நீ உடனே நாட்டுக்குத் திரும்பி வாழ்க்கையை அனுபவி," என்று போலியாக நாத்திகம் பேசுகிறார். அதைக் கேட்டு வெகுண்ட ராமன் "வேதத்தை இகழ்பவனும் திருடனும் ஒன்று. நீர் ஒரு திருடர். உம்மை இக்கணமே சகல வைதிக காரியங்களில் இருந்தும் விலக்கி விட்டேன். நீர் நாடு கடத்தப்பட வேண்டியவர்" என்று கோபத்துடன் முழங்குகிறான்.

அந்த தசரதராமன் இன்றிருந்தால் இந்த அக்னிஹோத்ரியை இந்த தேசத்தைவிட்டே துரத்தி அடித்திருப்பான். பிராமணத்வம் என்பது வெறும் பூணூலாலும், பிறப்பாலும், வேத அறிவாலும் மட்டும் வருவதல்ல. "ய: ப்ரம்மம் வேத்தி, ஸ: ப்ராஹ்மண:"– அதாவது பிரம்மத்தை அறிந்தவனே பிராம்மணன். தன் இஷ்டப்படி வேதங்களை விமர்சித்து சாத்திரங்களை நிந்திப்பவன் ப்ராம்மணன் அல்லன். அவன் மனிதனே அல்லன்.

ஒரு டேப்காஸட்டில் வேதத்தைப் பதிவு செய்து அதை டேப் ரெக்கார்டரில் பொருத்தி ஒலிக்க விட்டால் அந்த ஒலிநாடா வேத மந்திரங்களைத் தாங்கி இருக்கிறது என்கிற அளவில் அதற்கு மதிப்பு கொடுக்கலாமே தவிர அந்த டேப் ரெக்காடருக்கு பூணூலை மாட்டி, பஞ்சகச்சம் கட்டி, யாகம் செய்விக்கும் அத்வர்யுவாக உட்கார வைக்க முடியாது. ஒருவேளை அந்த டேப் ரெக்காடருக்கு சுய அறிவு ஏற்பட்டு

வேதத்தை நிந்திக்குமானால் அதை உடைத்தெறிய வேண்டியது தானே நாம் செய்ய வேண்டிய முதல் வேலை! அதே நிலையில் தான் இன்று அக்னிஹோத்ரி இருக்கிறார். அவருடைய நினைவில் வேதவாக்கியங்கள் இருக்கின்றன என்பதற்காக அவர் எழுதும் சாத்திர தூஷணங்களையெல்லாம் நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது. மதிப்பும் மரியாதையும், ஆத்மாவின் பக்குவத்தைப் பொறுத்துத் தரப்படுபவை. அதனால் தான் திருப்பாணாழ்வாரை சகல வேத பாராங்கதரான லோகஸாரங்கர் முதுகிலே சுமந்தார்.

ராவணன், ப்ரம்மாவின் வம்சம். ஒரு உத்தமப்ரம்மரிஷிக்கு மகனாகப் பிறந்தவன். சகல வேதங்களையும் கற்றவன். ஆனால் வைதிகத்துக்கும் தர்மத்துக்கும் மாறாக அவன் செயல்பட்டபோது அவனை அரக்கன் என்றுதான் அறிஞர்கள் ஒதுக்கினார்கள். "பிரம்மஸ்ரீ உபயவேதாந்த ராவணன் ஸ்வாமிகள்" என்று யாரும் அவனை கௌரவிக்கவில்லை! எனவே தான் அக்னிஹோத்ரிக்கு மறுப்புத் தெரிவிக்கும் போது மதிப்புச் சொற்களை நான் பயன்படுத்தவில்லை. ஸ்வாமியாவது மாமியாவது! – துடைப்பக்கட்டைக்கு பட்டு குஞ்சலம் தேவையா?

கட்டுரை எண் 74–ல் (நக்கிரன் 31–8–2005) விரதம் இருப்பதை அக்னிஹோத்ரி கண்டிக்கிறார். வேதங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் இடையில் ஒரு இடைவெளியைக் கொண்டு வருகிறார். வேதம் விரதம் இருக்கக் கூடாது என்று சொல்வதாகவும், ஸ்மிருதிகள் விரதம் இருக்கலாம் என்று சொல்வதாகவும் சொல்கிறார். இதற்கு ஆதாரமாக அவர் மேற்கோள் காட்டும் வேதவாக்கியம், மனிதன் உணவை ஒழுங்காகச் சாப்பிட வேண்டும் என்ற கருத்தைச் சொல்லுகிறது; விரதத்தை தடுக்கவில்லை. ஆகாரத்தின் முக்யத்துவத்தை எடுத்துச் சொல்லுகிறது. அந்த அத்யாயம் விரதத்தைப் பற்றிய அத்யாயமே அல்ல. வயிற்றில் ஜாடராக்னி என்ற பசி நெருப்பு எரியும் போது அதற்கு முறையாக உணவிட்டு உடலைப் பாதுகாக்க வேண்டும் என்கிற அறிவுரைதான் அது!

ஏகாதசி விரதம் இருக்கச் சொல்லும் பாட்டி, த்ரயோதசி அன்று பேரன் நன்கு சாப்பிட வேண்டும் என்று சொன்னால் "சாப்பிடு என்று சொல்லுகிறபாட்டி சாப்பிடாதே என்று சொல்லியிருக்க முடியுமா?" என்று வாதிடுவது போன்ற மடத்தனம் தான் இது. மேலும் வேதங்களோ ஞானத்தைப் பேசும் உபநிஷதங்களும் யாக கர்மாக்களைப் பற்றி பேசும் கர்ம காண்டங்களும் கொண்டவை. ஆனால் ஸ்மிருதிகளோ நடைமுறை வாழ்க்கை நெறிமுறைகளை எடுத்து சொல்பவை. இதன் நோக்கம் வேறு. அதன் நோக்கம் வேறு. இவை ஒன்றுக்கொன்று அனுசரித்து எழுதப்பட்டவையே தவிர, விரோதித்து உருவாக்கப்பட்டவை அல்ல. வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இவையெல்லாம் சேர்ந்ததுதான் இந்துமதம். ஒவ்வொன்றையும் ஒரு தனித் தலைப்பின் கீழ் ரிஷிகள் உருவாக்கினார்கள். அந்தத் தலைப்பு என்ன என்பதைப் பார்க்காமல் மாறுபாடு கற்பிக்கக் கூடாது. காமத்துப் பால் எழுதிய திருவள்ளுவர் தான் அறத்துப் பாலையும் எழுதினார். அறத்துப்பால் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுபவர்

திருவள்ளுவர் பரத்தையரை ஆதரித்து "பரத்தையர் பிரிவு" என்று எழுதி இருக்கிறார் என்று சொல்லக் கூடாது.

கட்டுரை எண் 73–ல் தர்மபாலர் என்பவர் எழுதிய பிரமாண வார்த்திகம் என்னும் புத்தகத்தில் இருந்து ஒரு சுலோகத்தை எழுதி அதற்கு சாருவாகன் போல் விளக்கங்கள் கொடுத்து, "சமஸ்கிருதம் எவ்வளவு கீழான விஷயங்களை போதிக்கிறது பாருங்கள்" என்கிறார் அக்னிஹோத்ரி. சம்ஸ்க்ருதம் என்ற மொழிக்கு அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களால் தான் மதிப்பே தவிர, வெறும் மொழி மாத்திரத்துக்கு மதிப்பில்லை. சம்ஸ்க்ருதத்தில் களவைச் சொல்லித்தரும் நூல்களும், குடிகெடுக்கும் மந்திரங்களும் காமரஸத்தைத் தூண்டும், ஆபாச நூல்களும், கடவுளே இல்லை என்று சொல்லும் சாருவாக நூல்களும் கூட உள்ளன. இவையெல்லாம் வணக்கத்திற்கு உரியவை என்று ராமானுஜர் சொன்னாரா? மத்வர் சொன்னாரா? புராணங்களிலேயே தாமச புராணங்கள் என்றும், ராஜஸ புராணங்கள் என்றும் தள்ளுபடியான சாத்திரங்கள் எல்லாம் உள்ளன. வடமொழியில் நரபலியைப் போதிக்கும் பயங்கர சாத்திரங்களும் நடைமுறைக்கு ஒவ்வாத தாந்திரிக நூல்களும் உள்ளன. நம் முன்னோர்கள் தேவையானவற்றை மட்டும் நமக்குக் கொடுத்துவிட்டு எவ்வளவோ நூல்களை தள்ளியிருக்கிறார்கள். 'நொண்டிக் கழுதைக்கு சறுக்குவதுதான் சாக்கு' என்று இந்த அக்னிஹோத்ரி சான்றாண்மை குறைந்த சில சம்ஸ்கிருத ஸ்லோகங்களை எடுத்துக் காட்டி இந்து மதத்தையே ஏளனப்படுத்துகிறார்.

கட்டுரை 72:– மனுஸ்மிருதி ஸ்லோகம் ஒன்றை மொழி பெயர்த்து "கங்கை நதிக்கும் யமுனை நதிக்கும் இடையில் வசிக்கும் ரிஷிகளே! உங்களை வணங்குகிறேன்", என்பதை எடுத்துச் சொல்லி, "இந்த ஸ்லோகத்தை காவிரிக்கரையில் உள்ள பிராம்மணன் சொல்லுகிறானே, இவனுக்கும் கங்கைக்கும் எவ்வளவு தூரம், இவன் காவிரிக்கரை ரிஷிகளையல்லவா வணங்க வேண்டும்! வட நாட்டானைத் தென்னாட்டான் வணங்க வேண்டும் என்று எவ்வளவு பெரிய சதி நடந்திருக்கிறது பார்த்தீர்களா?" என்கிறார்.

இமயமலை தொடங்கி விந்தியமலை வரை வியாபித்திருக்கும் ஆர்யாவர்த்தம் என்ற பிரதேசத்தில் அன்று ரிஷிகள் அதிகம் இருந்தார்கள். இந்த புனிதத்துவத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதற்காக அப்படிச் சொன்னார்களே தவிர பாரதத்தின் மற்ற இடங்களில் மஹான்கள் இல்லையென்றோ தோன்ற மாட்டார்கள் என்றோ அவர்களை வணங்கக்கூடாது என்றோ எங்கும் சொல்லப்படவில்லையே! வடநாட்டு ஸ்ரீரங்க விமானத்தை விபீஷணன் கொண்டு வரும் அது காவிரிக்கரையிலேயே தங்கி விட்டது என்றும் அதனால் காவிரி கங்கையை விட புனிதம் அடைந்தது என்றும் அதே சாத்திர கர்த்தா தானே எழுதி வைத்தான்! பாலாற்றங்கரையிலும், தாமிரபரணிக் கரையிலும், காவிரிக் கரையிலும் பெரிய மஹான்கள் தோன்றுவார்கள் என்று வட நாட்டு சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது.

அதே போல, சங்கரர், ராமானுஜர், மத்வர் ஆகிய மூவரும் தென்னாட்டில் தோன்றியவர்கள் தான். அவர்களுடைய

சித்தாந்தங்களை வட நாட்டவர் இன்றும் வணக்கத்தோடு படிக்கிறார்கள். வட நாட்டுப் புனிதத்தை தென்னாட்டவரும் தென்னாட்டுப் புனிதத்தை வடநாட்டவரும் உரிய முறையில் மதிக்கிறார்கள். காசிக்கும் கங்கைக்கும் தென்னாட்டவர் பயணிப்பது போல், சேதுவுக்கும், ஸ்ரீரங்கத்திற்கும் வடநாட்டவர்கள் பயணிக்கிறார்கள். கூட்டுக் குடும்பத்தை குலைக்க நினைத்து வேட்டு வைக்கும் விதவை போல் இந்த தாத்தாசாரியார் நாரதர் வேலை பார்க்கிறார். தொண்ணூறைத் தாண்டிவிட்ட இந்த முதமைப் பிராயத்தில் இவருக்கு ஏன் இந்த துர்புத்தி?

கட்டுரை 71–ல், ஸ்ரீரங்கம் நம்பெருமாளை அதாவது உற்சவரை, வெளியே தூக்கிக் கொண்டு வந்து ஒரு தனியிடத்தில் எழுந்தருளப் பண்ணி அவரை நாலாயிரம் கேட்கும்படி செய்கிறார்கள். தமிழ் கர்ப்ப கிரஹத்தில் நுழையக் கூடாது என்று ஓரவஞ்சனையாக உற்சவரை வெளியே வைத்து தமிழ் வாசிக்கிறார்கள் என்று சாடுகிறார். இது தமிழுக்குக் கேவலம் அல்லவா? என்கிறார்.

தமிழை ஸ்ரீரங்கத்திலுள்ளவர்கள் கேவலப்படுத்துகிறார்களா? அல்லது இந்த அக்னிஹோத்ரி அசிங்கப்படுத்துகிறாரா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஸ்ரீரங்கம் கோயில் உற்சவருடைய அருமை தெரியுமா இவருக்கு? துலுக்கரிடம் இருந்து இந்த உற்சவரை காப்பாற்ற எவ்வளவு தியாகங்கள் மேற் கொள்ளப்பட்டன என்பது இவருக்கு தெரியாததல்ல. மூலவரைவிட உற்சவர் எந்தவகையில் குறைந்தவர்? மேலக் கோட்டை உற்சவர் செல்வப் பிள்ளையைத் தேடி ஸ்ரீராமானுஜர் அலைந்த அலைச்சல் என்ன? பட்ட பாடு என்ன? அனாச்சாரம் பிடித்த பாதுஷா முன்பு அவர் மடியேந்தி நின்றதென்ன? கேவலம் உற்சவர்தானே என்று அவர் நினைத்திருந் தால் இப்படியெல்லாம் செய்திருப்பாரா? மூலவர் தான் உற்சவராக திருவீதி புறப்பாடு ஆகிறார் என்று தானே ஆகமங்கள் கூறுகின்றன. ஒரு தேசத்து மஹாராஜாவை தர்பாரை விட்டு அந்தபுரத்துக்கு வரச் செய்து அவரோடு அந்தரங்கமாகப் பேசும் உறவினர் போல, நாலாயிரம் சேவிப்பவர்கள் ஸ்ரீரங்கம் உற்சவரை தனியே எழுந்தருளப் பண்ணி அவருக்கு மிகவும் பிரியமான பச்சைப் பசுந்தமிழை கேட்கப் பண்ணுகிறார்கள். மேலும், ஆழ்வார்கள் பாடிய அந்தமிழ்ப்பாசுரங்கள் ஸ்ரீரங்கத்தில் மூலவரிடம்தான் தொடங்கப்படுகின்றன, அதற்குப் பிறகே உற்சவர் முன்னால் ஓதப்படுகின்றன என்ற செய்தி இவருக்குத் தெரியாது போலும்! பலமொழிகளிலும், பிரார்த்தனைகளைச் செவிமடுக்கும் மூலவர் ரங்கநாதனைவிட உற்சவரே தனித்தமிழில் கௌரவிக்கப்படுகிறார். இது தமிழுக்கு உயர்வு. தமிழ் நாட்டுக்கும் உயர்வு. இந்த வக்ரபுத்தி அக்னிஹோத்ரி இதற்கு ஏன் குதர்க்கமாக விளக்கம் தருகிறார்?

உங்களிடம் இருந்து விடைபெறும் முன் ஒரு கேள்வி! இந்துமதம் இப்படி நக்கீரன் பத்ரிகையில் சீரழிக்கப்படுவது குறித்து நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?